# அம்மா.... மாத்தி யோசிக்கலாம், வாங்க!

இந்த வருஷம் என் மகள் முதலாம் வகுப்பு சேர்ந்ததும், ஏதோ மாற்றம் தெரிஞ்சது! துறுதுறு சுட்டிப்பெண் அவள். கற்பனை வளத்துக்குக் குறைச்சலே இல்ல அவகிட்ட. திடீர்னு டீச்சர்களிடமிருந்து புகார் மேல புகார். ஒரு இடத்துல உட்காரமாட்டேங்கறா, எதுலயும் ஆழ்ந்த ∴போக்கஸ் இல்ல, எழுத படிக்க கஷ்டப்படறா, ஒருங்கிணைப்பு பற்றி சொல்லவே வேணாம், சீரா எதையுமே அவளால செய்யமுடியல. இப்படியெல்லாம் புகார்கள். அது ஒரு புதிய பள்ளி. அவங்க சொன்னதை எல்லாம் நான் முதல்ல பெரிசா எடுத்துக்கல. ஆனா, பள்ளில என்னை வரச்சொன்னாங்க. கற்றலில் குறைபாடு (LD - learning disabilities) ஏதாவது இருக்கான்னு தெரிஞ்சிக்க screening பண்ணச்சொன்னாங்க.

அபாயக் கோட்டுக்குள்ள (at risk category) இருக்கறதா தெரியவந்தது. முதல்ல என் கணவராலயும், என்னாலயுமே இத நம்பமுடியல. ஆனா LDய பத்தி நிறைய நிறைய படிக்க படிக்க, கொஞ்சம் கொஞ்சமா புரிய ஆரம்பிச்சது. இதன் அறிகுறிகள் ஏற்கனவே இருப்பதும் புரிஞ்சது.

-------

மூன்று வருடங்கள் முன்பு, ஒரு நாள் பால்கணியில் துணி உலர்த்திக் கொண்டிருந்தேன். என் செல்லமகள் புடவைத் தலைப்பை இழுத்து ‘பசிக்கி... மா’ என்றாள். ‘‘அப்பாகிட்ட போய் எனக்கு பசிக்குது பான்னு சொல்லு. குக்கீஸ் தருவார். சாப்பிடு குட்டிமா’’, என்றேன்.

‘‘ப்பா, உனக்கு பசிக்கி’’ என்றாள் அவள், அப்பாவிடம்.

எனக்கு ஒரே சிரிப்பு. வம்பு செய்கிறாள் என்றுதான் நினைத்தேன். ஹோம் அலோன் திரைப்படத்தில் வரும் அந்த வாலு கெவின் மெக்கேலிஸ்டர் போல் தோன்றியது. ‘‘குட்நைட் கெவின்’’ என்று அவன் அம்மா சொல்லும்போது, பதிலுக்கு அவன் ‘‘குட்நைட்னு சொல்லு, கெவின்’’ என்ற தனக்கே சொல்லிக்கொள்வான்.

அடுத்தமுறை இதேபோல் அவள் செய்தபோதும், சிரிப்புதான் வந்தது. கிட்டத்தட்ட அதே வருடம்தான். ப்ளேஸ்கூலில் டீச்சரிடம் பாத்ரூம் வந்தால் எப்படிச் சொல்வது என கற்றுக்கொடுத்தேன். யாராவது பரிசு தந்தாலோ, பாராட்டினாலோ எப்படி பதில் சொல்ல வேண்டும் என ஏற்கனவே அவளுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தேன். அதே போலவே இப்போதும் மெது மெதுவாய் சொல்லித் தந்தேன். (‘‘என்ன சொல்வ? சொல்லு கண்மணி. ஆங்… அப்படித்தான்’’. ‘‘தேங்க் யூ’’ என்பாள். )

மீண்டும், காட்சியை விளக்கிய பின், ‘‘பாத்ரூம் வந்தா, மிஸ்கிட்ட என்ன சொல்வ?’’ என்று கேட்டேன். ‘‘ம்ம்… அதுவா… ம்ம்.. தேங்க்யூ சொல்வேன்’’ என்றாள்.

பிற கேள்விகளுக்கும் பதில் சொல்வதில் தயக்கங்கள் பல, ‘‘குட்டிமா, உனக்கு பிடிச்ச சாப்பாடு எது?’’ ‘‘ம்ம்.. ம்ம்.. ம்ம்..’’. சரியான பதிலை கண்டுபிடிப்பதற்குள் தவித்தாள், தடுமாறினாள், பதறினாளோ என்று கூட ஒரு கணம் தோன்றியது.

ஒன்றோடு ஒன்றை தொடர்புபடுத்துவது கற்றலில் குறைபாடுள்ள குழந்தைகளுக்குப் பொதுவான சவால். இது கைவராத நிலையில், பலவற்றிலும் இந்தச் சவால் பன்மடங்காகப் பரவியது. முழுவாக்கியங்கள் பேசுவதில் ஒரு தயக்கம். ஒன்றை வார்த்தை பதில்கள், மிஞ்சிப் போனால் சிறு வார்த்தைக் கோர்வைகள்.

இதற்குப் பின் இது, அடுத்தது இது வரும், இந்த நிகழ்வுக்குப் பின் இது நடந்தது. இதை அடுத்து இதனைச் செய்ய வேண்டும். முன்னே அது, பின்னே இது என்பன போன்ற சாதாரண தொடர் நிகழ்வுகளை வரிசைப்படுத்துவதில் குழப்பம் அல்லது இயலாமை.

வாசித்தல், எழுதுதல், கணக்குப் போடுதல் - இவை எல்லாவற்றிற்கும் என்ன தேவை என பார்க்கலாமா? மூளையில் பதிய வைத்துள்ள பல விஷயங்களில், தேவையானவற்றைத் தேடி எடுத்து தொடர்புப்படுத்தி, ஒன்றோடு ஒன்றை இணைத்து, இதற்கடுத்து இது, பின்பு இது என்ற செயல்படுத்தவேண்டும். அதற்குத் தேவையான திறன்களை அங்காங்கே வேண்டிய அளவு பயன்படுத்தவேண்டும். தேவையற்றவற்றை ஒதுக்கவும் தேவையானவற்றை சீராய் கோர்க்கவும் மூளைக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் படிக்கவோ, எழுதவோ, எண்ணவோ கூட முடியும்.

அதுநாள்வரை எனக்கு இவை பற்றி எல்லாம் தெரியாது. இவளைப் போன்ற 6வயது குழந்தைகள் கட்டுரை எழுதுவது, ரோல்ட்தால் புத்தகங்களை வாசிப்பது, கணக்குப் போட்டிகளில் கலந்துகொள்வது பற்றி நிறைய கேள்விப்பட்டிருந்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரிந்ததெல்லாம். வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்கும், படிப்பில் அசத்தும் குழந்தைகளை விட்டுவிடலாம். மிகச் சாதாரணமான, சுமாரான குழந்தைகளின் பெற்றோர்கள் கூட தங்கள் பிள்ளைகள் நூலகத்திலிருந்து புத்தகம் வாங்கி வாசிப்பது பற்றி ப்ரஸ்தாபித்தார்கள்.

என்னுடைய மகளோ, இன்னமும் ‘அம்மா’ என்பதை ‘அ-ம்-ம-அ’ என்றும், ‘ஊர்’ என்பதை ‘உ ளர’ என்றும், ‘கை’ என்பதை ‘ந-க’ என்றும் குழம்பினாள். வார்த்தை இறுதியில்

வந்த மெய்எழுத்துக்கள் புள்ளிகளைத் தொலைத்தன. ‘chat’ஐ என்றும் ‘ka-h-at’ என்றும் ‘ship’ஐ ‘ss-hip’ என்றும் பிரித்துக் தவறாக உச்சரித்துக்கொண்டிருக்கிறாள். சாதாரண ஒலி வடிவங்கள் கூட அவளை திக்குமுக்காடச் செய்கின்றன. அவள் ஒரு முழு வாக்கியத்தைப் படிப்பது என்றாவது நடக்குமா? கானல் நீராய் மறைந்துவிடுமா?

ஆனால் பிற பெற்றோர்கள் மூலம், (குழந்தைகளால் அல்ல) உண்டான மன அழுத்தத்தை சமாளிக்க முடியாமல், மூச்சுவிடக் கூடத் திணறினேன் என்பதுதான் உண்மை.
என் மகள் புத்தக வாசிப்பு எனும் உலகின் விந்தைகளில் என்றாவது திளைத்து மகிழ்வாளா? சிந்தனையில் மூழ்கினேன்.

--------

கற்றல் திறனுக்கான சோதனை முடிவுகள் வந்தன. கற்றல் குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் பெற்றோருக்கான ஒரு வகுப்பில் சேர்ந்தேன். என் சின்னப் பெண்ணின் மனம் எவ்வாறு வேலை செய்கிறது எனப் புரிந்துகொள்ள, புதிரான அவளின் பாதையில் நடை பழகினேன். (https://theswaddle.com/category/learning/special-needs/)

அட! என் சுட்டிப்பெணின் மூளை மிகவும் வேறானது. அவள் ஒரு செவிவழி மற்றும் காண்வழி - இருவழி மூலமும் கற்கும் குழந்தை. சொல்லப்போனால், ரிச்சர்ட். எம். ∴பெல்டர் மற்றும் ரெபெக்கா ப்ரென்ட் ஆகியோரின் ஆய்வுப்படி (http://www4.ncsu.edu/unity/lockers/users/f/felder/public/ILSdir/styles.htm), கிட்டத்தட்ட 82% மாணவ மாணவியர் காண்வழி கற்பவர்கள், என் மகளைப் போலவே! அவர்கள் தாங்கள் பார்ப்பதை நினைவில் வைத்துக் கொள்பவர்கள் - படங்கள், வரைபடங்கள்,

ஓவியங்கள், ஃப்ளோ சார்ட், நேரக் கோடுகள், திரைப்படங்கள், விளக்கப்படங்கள், செய்முறைகள் போன்ற இவற்றின் மூலம்.

ஆனாலும் நம் காலாவதியான கற்பிக்கும் முறை, வார்த்தை வழி பயில்பவர்களுக்கே உகந்ததாய் உள்ளது. புது வார்த்தைகளை சொல்லிப்பார்த்து, அதனை ஒரு தகவலாக நினைவில் நிறுத்தவேண்டும். அதுவும் அவர்கள் எந்த மொழியில் அப்போது கேட்கிறார்களோ, வாசிக்கிறார்களோ, எழுதுகிறார்களோ, அதே மொழியில் நினைவில் செதுக்க வேண்டும். இந்த ஒரே வழியிலேயே எல்லாருமே கற்க வேண்டும் என்பதால்தான் பள்ளிகளில் கற்றல் குறைபாடுடைய குழந்தைகள் தவிக்கிறார்கள்.(https://theswaddle.com/a-classroom-that-supports-children-with-special-needs/ ).

அந்தக் கடினமான ஒலிச்சேர்க்கைகளை என் மகள் கற்கிறாள்- ஒலி வழி அல்ல, மாறாக பார்ப்பதன் மூலம். அவள் பார்க்கும் எந்தஒரு வார்த்தையிலும் உள்ள ஒலிச்சேர்க்கைகளை வட்டமிடவைக்கிறேன்.

*கற்றல் குறைபாடுடையவர்கள்* எனக் குழந்தைகளை முத்திரை குத்துவது தவறான போக்கு. LD என்பது கடலளவு பிரச்சனைகளை உள்ளடக்கியது - டிஸ்க்ராஃபியா, டிஸ்லெக்ஸியா தவிர, மேலும் பல சவால்கள் உள்ளன. இவையனைத்தும் ஒற்றைக் கூரையின்கிழ், பொதுப்படையாய், ஒரேவகை சிக்கல் எனக் கொள்ளப்படுகிறது. அதுவும் உண்மையில், குழந்தைக்குக் குழந்தை இது வேறுபடும். ஒவ்வொரு குழந்தையைப் பொறுத்தது. உதாரணத்துக்கு, என் தோழியின் மகளுக்கு டிஸ்கேல்குலியா - அதனால் கணக்கு கசக்கும், ஆனால் எழுதவதில் படுசுட்டி.

பள்ளியில் மொழிகளைக் கற்பதற்குத் திண்டாடுகிறாள் என் மகள். ஆனால் ‘Let it go’ பாடலை ஓரிருமுறை யூ-ட்யூபில் கேட்டபின், ஜப்பானிய ஸ்பானிஷ் மொழிகளில் பாடக் கற்றுக் கொண்டுவிட்டாள். பார்க்கும் எந்த ஒரு படத்தையும் அவள் அப்படியே வரைந்துவிடுவாள். கற்பனைக் குதிரையை தட்டிவிட்டால், அழகு கோவியங்களின் நேர்த்தி நம்மை அசத்தும்.

கற்றல் குறைபாடுகளைப் பற்றி நான் மேன்மேலும் அறிந்துகொள்ளும்போது, கற்றலில் உள்ள சிக்கலை சீர்செய்ய நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு தெளிவான திட்டமிடல், ஒரு சீர்நிலை (balance) அவசியம். மாலை வகுப்புகளுக்குப் பதில், பள்ளி முடிந்தபின் அவளை விளையாட வைக்கிறேன். ஏனெனில் விளையாடுவதன் மூலம் மூளை நரம்பணுக்கள் உயிர்ப்படையும், பிற நரம்பணுக்களோடு இணைப்பு பெற்று மூளையின் மூக்கிய கட்டுப்பாட்டு மையம் திணவுறும். இதனால் ஒன்றோடு ஒன்றை தொடர்படுத்தும், இணைத்துப் பார்க்கும் திறன் வளரும்.

அதற்காக பள்ளிப்படிப்பு, தேர்வுகள், தரத்தேர்வுகள் வேண்டாம் என விலகுதல் இல்லை. அவளின் கற்றல் திறன் மேம்பட மைண்ட் மேப்ஸ்,(mind maps) லாப் புக்ஸ்(lap books) போன்ற காண்வழி உதவிப்பொருட்களை நான் பயன்படுத்துகிறேன். வாசித்தல் என்பது மிக முக்கியமான திறனாயிற்றே!

எப்போது அவள் பத்திபத்தியாய் வார்த்தை ஜாலத்தால் நிரப்பப்பட்டிருக்கும் புத்தகங்களை படித்து மகிழ்வாளோ என்ற எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன். என் மனதில் உள்ள மிகப் பெரிய கேள்வி இதுதான் - ஊர் உலகின் அந்தச் சின்ன வட்டத்திற்கு ஏற்ப, ஒரு பள்ளியில் (சமுதாயத்தில்)

காலம்தள்ளத் தேவையான மனத்திண்மையை என் மகளுக்குத் தருவது எப்படி? கூடவே, அவளுடைய தனித் தன்மையை நான் புரிந்துகொண்டு, உடன்படுவது எப்படி?

மற்ற ஒவ்வொரு குழந்தையைப் போலவும் அவளும் பரிட்சையில் தூள் கிளப்பவேண்டும், படிக்க வேண்டும், எழுத வேண்டும் என மனதின் ஒரு பகுதி யாசிக்கிறது. அதே சமயம், இன்னொரு பகுதியானது, உலகை வேறான பார்வையில் காணும் அவளின் அந்த மனவளத்தை மதிக்கிறது. அவள் மனதில் தோன்றும் அந்த வார்த்தைப் ப்ரயோகங்கள், வித்யாசமானவை, அர்த்தம் பொதிந்தவை, புதிய வெளிச்சம் தருபவை, அவளில் தோன்றியவை, அவளின் வெளிப்பாடு, அவளின் மனத்தை வெளிப்படுத்துபவை, அவள் எண்ண ஓட்டத்தின் புதுமையை புரியவைப்பவை. மாத்தி யோசிக்கும் வரம் பெற்றவள் அவள்.

ஸ்டீவன் ஸ்பீல்பர்க்கிற்கு கற்றல் குறைபாடு இருப்பது சமீபத்தில்தான் தெரியவந்தது (http://www.express.co.uk/celebrity-news/348652/Steven-Spielberg-turned-to-directing-to-escape-dyslexia-taunts). என் மனதை பல ஆண்டுகளாய் நச்சரித்தப் புதிருக்கான விடையின் முற்றுப்புள்ளிதான் இந்தச் செய்தி என்கிறார் அவர். திரைப்படம் எனும் காணொளிக் கலையைத் தான் தேர்ந்தெடுத்ததின் பின்புலத்தை விளக்குகிறது இது என்கிறார் அவர். E.T. திரைப்படத்தின் பெரும்பாலான பகுதியை ஒரு குழந்தையின் பார்வையிலேயே காட்சிப்படுத்தியதாகவும், அப்போதுதான் ரசிகர்கள் அந்தக் கதையோடும், அந்த E.T.யோடும் ஒன்றமுடியும் என நினைத்ததாகவும் கூறினார். இப்படியாப்பட்ட கருத்து, மிகவும் வித்தியாசமாக சிந்திக்கும் ஒரு குரலாகவே எனக்குத் தோன்றுகிறது.

நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? என் மகளும் நானும், நாம் அனைவரும் இந்தச் சீர்நலையை balanceஜக் கண்டுபிடித்துவிட்டால், அவளுக்கும், அவளைப் போன்று கற்றல் குறைபாடுடைய பிற குழந்தைகளுக்கும் வானமே எல்லை!

**Link for the original article in English by Shweta Sharan**

**[https://theswaddle.com/parents-of-children-with-learning-disabilities/](https://theswaddle.com/parents-of-children-with-learning-disabilities/)**

தமிழில் **உத்ரா துரைராஜன்**

**[www.uthradgvc.synthasite.com](http://www.uthradgvc.synthasite.com)**